# DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.53/2022
Prosecution Witness P.W.1

| | |
|---|---|
| Name : **திரு.பழனிச்சாமி** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

**எதிரிகள் 1 முதல் 5 மற்றும் 8 ஆஜர், 6 வது எதிரி இறப்பு, 7 வது எதிரி ஆஜரில்லை அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது.**

**நாள்: 06.10.2025.**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் அணைக்கரைப் பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆண்டிப்பட்டியில் போர்மேனாக பணிபுரிந்து 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நான் பணி ஓய்வு பெற்றேன். இறந்து போன நவீன்குமார் எனது 3 வது மகன். எனது இறந்து போன மகன் நவீன் குமார் குள்ளபுரத்தில் உள்ள வேளாண்மை கல்லூரியில் எழுத்தராக பணிபுரிந்து வந்தார். அவருக்கு சம்பவ சமயத்தில் 29 வயது அவரது போன் நம்பர் எனக்கு தெரியும் அந்த நம்பர். 9659090871.

2. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகள் அனைவரையும் எனக்குத் தெரியும். எனது மகன் பணிபுரியும் சமயத்தில் நான் எனது மகனுடன் எதிரிகளை பார்த்திருக்கிறேன். எனக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகள் நேசமணி, கார்த்திக், செல்வமணி மற்றும் மனோஜ்குமார் ஆகியோர்கள் பெயர்கள் எனக்கு தெரியும் மற்ற எதிரிகள் பெயர் எனக்கு தெரியாது. ஆனால் அவர்களை எனது மகனுடன் பார்த்திருக்கிறேன்.

3. கடந்த 15.01.2021ம் தேதியன்று தைப்பொங்கல் திருநாளன்று எங்கள் ஊரில் வழக்கமாக குழந்தைகளுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவது வழக்கம். எங்கள் ஊரின் நடுமந்தையில் நாங்கள் போட்டியில் ஜெயித்த குழந்தைகளுக்கு மாலையில் பரிசுகள் அறிவித்து வழங்குவது வழக்கம். அன்றைய தினம் மாலை 6 மணி அளவில் நான் விளையாட்டு போட்டி நடக்கும் இடத்திற்கு பார்ப்பதற்காக சென்றபோது எனது மகன் 6.00 மணிக்கு வீட்டிலிருந்து வெளியில் கிளம்பி சென்றார். நான் அவர் எங்கு செல்கிறார் என்பது குறித்து விசாரிக்கவில்லை.

4. சுமார் இரவு 08.30 மணியளவில் நான் பரிசுகள் வழங்கும் நிகழ்வில் இருந்த சமயம் எங்கள் ஊருக்கு பக்கத்து ஊரான கீழ் புதூரை சேர்ந்த எங்கள் உறவினர் செல்வம் மகன் சசிகுமார் என்பவர் நான் இருக்கும் இடத்திற்கு ஓடிவந்து அணைக்கரைப்பட்டி மந்தையில் நான் இருக்கும்போது சசிகுமாரும், அர்ஜுன், எனது மகன் நவீன்குமார் மற்றும் மற்றொருவரும் ஆகிய நால்வரும் சேர்ந்து அணைக்கரைப்பட்டி மயான கொள்ளை அருகில் மது அருந்தி கொண்டிருந்ததாகவும், அங்கு வந்த செல்வமணி, நேசமணி, கார்த்திக், பிரபு, பாண்டி, முத்துமாரி, செல்வமணியின் தாய்மாமன் சிவக்குமார், அணைக்கரை பட்டியைச் சேர்ந்த மனோஜ்குமார் ஆகியோர் அங்கு வந்து, எதிரிகள் அனைவரும் அந்த இடத்திற்கு பைக்கில் வந்ததாகவும், மனோஜ்குமார் மற்ற எதிரிகளை பார்த்து அடித்துக் கொள்ளுங்கள் என தங்களை பார்த்து சொன்னதன் பேரில் சசிக்குமார் ஓடிவந்து எங்களிடம் தகவல் சொன்னார்.

5. நான், எனது மகன் ரணதீபன், ஜெகதீசனின் பெரியப்பா கண்ணன் மற்றும் ஊர்க்காரர்கள் ஆகியோர் எங்கள் ஊரில் இருந்த மயான கொள்ளைக்கு சென்றோம். அது நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தூரத்தில் இருக்கும் அங்கு சென்றோம். நான் ஓடிச் சென்று பார்க்கும்போது மயான கொள்ளை நிழற்குடை அருகில் எனது மகன் நவீன் குமார் மல்லாக்க கீழ விழுந்து கிடந்தார். எனது மகனுக்கு இடது பக்கம் மார்பில் ஒரு குத்து காயம், நெஞ்சின் மேல் பகுதியில் நடுவில் மற்றொரு குத்து காயமும்

இருந்ததை பார்த்தேன். எனது மகனின் வலது பக்க மண்டையில் பின் பகுதியில் ஒரு காயம் இருந்ததை பார்த்தேன்.

6. எனது மகனுக்கு அருகில் ஜெகதீஷ் என்பவர் ரத்த வெள்ளத்தில் உட்கார்ந்து இருந்தார், அவருக்கு இடது பக்க தோள்பட்டையில் ஒரு குத்து காயம் இருந்தது அவருக்கு இடது பக்க மூக்கில் ஒரு கிழிந்த காயமும், கன்னத்தில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அவருக்கு பக்கத்தில் அர்ஜுனன் என்ற மற்றொரு நபருக்கு இடது பக்க மார்பில் ஒரு காயம் இருந்ததை நான் பார்த்தேன். நானும் எனது மகன் ரணதீபன் எனது மகனை பார்க்கும்போது அவருக்கு பேச்சு மூச்சு இல்லை அவரது உடலை தூக்கிக்கொண்டு ஊருக்குள் எடுத்துவந்தோம். எங்கள் உறவுக்காரர் ஜேபி என்பவர் TATA Ace வாகனம் வைத்திருக்கிறார். அந்த வாகனத்தின் உதவியுடன் எனது மகன் நவீன் குமாரை ஏற்றிக்கொண்டு க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு நாங்கள் விரைந்து சென்றோம். எனது மகனை மருத்துவர்கள் பரிசோதனை செய்து, அவர் இறந்ததாக உறுதி செய்தார்கள்.

7. எனது மகனின் பிரேதத்தை பிணவறையில் வைக்க உத்தரவிட்டார்கள். ஜெகதீசனின் பெரியப்பா கண்ணன் மற்றும் அர்ஜுனனின் உறவினர் சிரஞ்சீவி ஆகியோர் அவர்களை போக்கு ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு முதலில் ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்கள். அவர்களுடன் சம்பவத்தை பார்த்த சசிக்குமார் என்பவரும் உடன் வந்திருந்தார். சம்பவத்தை கேள்விப்பட்டு எங்கள் ஊர்க்காரர்கள் நிறைய பேர் மருத்துவமனைக்கு வந்தார்கள். சசிகுமார் என்னை மருத்துவமனையில் பார்த்து காயம் பட்ட ஜெகதீஷ் மற்றும் அர்ஜுனன் இருவரையும் தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அழைத்து வந்து சிகிச்சையில் சேர்த்து இருப்பதாக என்னிடம் தகவல் சொன்னார்.

8. நான் எனது மகன் ரணதீபன் மற்றும் சிரஞ்சீவி, கண்ணன், எனது சித்தப்பா மகன் சிங்கம் மற்றும் ஊர் பெரியவர்கள் வந்து சசிகுமாரிடம் நடந்த விபரங்களை விசாரித்தோம். அப்போது சசிகுமார் எங்களிடம் நானும், இறந்து

போன நவீன் குமார், காயம் அடைந்த ஜெகதீஷ் மற்றும் அர்ஜுனன் ஆகிய நால்வரும் அங்கு மயான கொள்ளையில் இருந்ததாகவும், மது அருந்தி கொண்டிருந்ததாகவும், திடீரென அப்போது அந்த இடத்திற்கு நேசமணி, செல்வமணி, சிவக்குமார், கார்த்திக், பிரபு, பாண்டி, முத்துமாரி, மனோஜ்குமார் ஆகிய 8 பேர் அங்கு வந்ததாகவும் மனோஜ் குமார் மற்ற எதிரிகளிடம் எனது மகன் மற்றும் ஜெகதீஷ், அர்ஜுனன் ஆகியோர்களை அடையாளம் காட்டி அங்கு தான் இருக்கிறார்கள் அவர்களை போடுங்கள் என சொன்னதாகவும், எதிரிகள் கத்தியை கொண்டு தனது மகனை தாக்கியதாகவும், நேசமணி எனது மகனின் மேலே உட்கார்ந்து கத்தியால் குத்தியதாக என்னிடம் சொன்னார்.

9. ஜெகதீஷ் எனது மகனை குத்துவதிலிருந்து காப்பாற்றுவதற்காக சென்றபோது எதிரி கார்த்திக் ஜெகதீஷை கத்தியால் குத்தியதாக தெரிவித்தார். நேசமணி மற்றும் செல்வமணி மற்றும் கார்த்திக் ஆகிய மூவரும் யாரேனும் அருகில் காப்பாற்ற வந்தால் குத்தி கொன்று விடுவோம் என மிரட்டியதாகவும் தெரிவித்தார். காப்பாற்ற வந்த அர்ஜுனனையும் அடித்து போட்டதாக தெரிவித்தார். சசிகுமார் அவர்களிடமிருந்து உயிர் தப்பி ஓடி வந்து தகவல் சொன்னதாக தெரிவித்தார். மறுநாள் விடியற்காலை 02.00 மணியளவில் ஆண்டிப்பட்டி காவல் நிலையத்திற்கு சென்று இது சம்பந்தமாக புகார் தெரிவித்தோம்.

10. எனது சித்தப்பா மகன் சிங்கம் உதவியுடன் புகார் நான் சொல்ல சொல்ல அவர் எழுதினார். என்னிடம் காண்பிக்கக்கூடிய புகார் தான் நான் ஆண்டிப்பட்டி காவல் நிலையத்தில் எழுத்து மூலமாக கொடுத்த புகார் அது அ.சா.ஆ.1. எனது மகன் சம்பவ சமயத்தில் வெள்ளை நிறத்தில் சட்டையும், சாம்பல் நிறத்தில் வேஷ்டியும், பிரவுன் நிறத்தில் உள்ளாடையும் அணிந்திருந்தார். நீதிமன்றத்தில் காண்பித்தால் அவற்றை என்னால் அடையாளம் சொல்ல முடியும். அந்த கைலி மற்றும் உள்ளாடை சா.பொ.1 மற்றும் 2.

11. எதிரிகளுடன் எனது மகன் நல்ல முறையில் தான் பழகி வந்திருக்கிறார். 1 வது எதிரி நேசமணியின் தாத்தா மாட்டு கொட்டகையில் எனது

மகன் மது அருந்த சென்ற சமயத்தில் ஏதோ வாய் தகராறு ஏற்பட்டு நேசமணிக்கும், எனது மகனுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு நேசமணிக்கும், எனது மகனுக்கும் அதன் பிறகு போனில் காரசாரமாக உரையாடல் நிகழ்ந்துள்ளது அதனைத் தொடர்ந்துதான் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது என நான் விசாரித்த வகையில் தெரிந்து கொண்டேன். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் நான் விவரங்களை சொன்னேன்.

**<u>எதிரிகள் 1 முதல் 5 மற்றும் 8 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனது மகன் பயன்படுத்தி வந்த கைபேசி எண்ணை எனது புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேனா என்றால் நான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் 15.01.2021 ஆம் தேதியன்று மாலை 6.00 மணிக்கு நான் எனது வீட்டை விட்டு விளையாட்டு போட்டி நடக்கும் இடத்திற்கு எனது மகனும் வீட்டில் இருந்து கிளம்பிச் சென்றார் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. சசிக்குமார் விளையாட்டு போட்டி நடத்தும் மந்தைக்கு ஓடி வந்த எதிரிகள் யார், யார் என்ன செய்தார்கள் என்று என்னிடம் கூறியதாக முதல் விசாரணையில் சொன்னவாறு சொன்ன விபரங்களை நான் புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

2. மந்தையிலிருந்து சுடுகாடு சுமார் 200 மீட்டர் தூரம் என முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை போலீஸ் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அர்ஜுனனுக்கு இடது பக்க மார்பில் காயம் இருந்தது என்று முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். 02.00 மணிக்கு அதிகாலையில் புகார் கொடுத்ததாக சொல்லும் விவரத்தை ஆய்வாளர் என்னை விசாரணை செய்யும்போது சொல்லியுள்ளேன். எனது மகன் சம்பவ சமயத்தில் வெள்ளை சட்டை

அணிந்திருந்த விபரத்தை புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. நான் சம்பவ இடத்திற்கு ஓடிச் சென்று எனது மகனை பார்த்த போது அவர் சட்டையில்லாமல் தான் இருந்தார். எங்கள் ஊர் அணைக்கரைப்பட்டிக்கும் பக்கத்து ஊரான குள்ளபுரத்திற்கும் 3 கிலோமீட்டர் தூரம் இருக்கும். அணைக்கரைப்பட்டிக்கும், குள்ளபுரத்திற்கும் இடையே எந்த கிராமமும் கிடையாது என்றால் சரிதான். அணைக்கரைபட்டியிலிருந்து ஆண்டிபட்டி டி.எஸ்.பி அலுவலகம் 3 கிலோமீட்டர் முதல் 4 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல, 6 கிலோமீட்டர் தூரம் இருக்கும். குள்ளபுரத்திற்கும், அணைக்கரைப்பட்டிக்கும் இடையே ஆற்றுப் பாலம், உள்ளது மெயின் ரோடு பாதையில் உள்ளது.

4. இருசக்கர வாகனத்தில் அணைக்கரைப்பட்டிக்கு குள்ளபுரத்திலிருந்து சுமார் 2 – 3 நிமிடத்தில் வந்து விட முடியும் என்றால் சரிதான்.எங்கள் ஊரில் இருந்து மதுரை–தேனி மெயின் ரோடு வந்தவுடன் டி.எஸ்.பி அலுவலகத்தை தாண்டியவுடன் சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில் ஆண்டிப்பட்டி காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். அங்கிருந்து சுமார் 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனை மேற்கே உள்ளது என்றால் சரிதான். அங்கிருந்து 6 கிலோமீட்டர் தூரத்தில் க.விலக்கு அரசு மருத்துவமனை அமைந்துள்ளது என்றால் சரிதான்.

5. எங்கள் ஊரில் இருந்து தேனி மெயின் ரோட்டுக்கு வந்து அங்கிருந்து க.விலக்கு அரசு மருத்துவமனை செல்வதற்கு வரும் வழியில் இரண்டு இடங்களில் போலீஸ் செக் போஸ்ட் உள்ளது என்றால் ஒரு இடத்தில் தான் போலீஸ் செக் போஸ்ட் உள்ளது. எங்கள் ஊர் முகப்பில் மாரியம்மன் கோவில் மற்றும் கல்யாண மண்டபம் அமைந்துள்ளது என்றால் சரியல்ல ஊருக்கு வெளியே வடக்கு பக்கம் ஆற்றுப்பாலத்திற்கு அருகில் அவை அமைந்துள்ளது. குள்ளபுரத்திலிருந்து இரண்டு பாதைகளாக வந்தாலும் அந்த ஆற்றுப்பாலத்தை

கடந்து தான் எங்கள் ஊருக்கு வர வேண்டும் என்றால் சரிதான். அந்த ஆற்றுப் பாலத்தின் அகலம் சுமார் 15 – 20 அடி, நீளம் 50 மீட்டர் இருக்கும்.

6. பாலத்தில் இருந்து சம்பவம் நடந்ததாக சொல்லும் சுடுகாடு சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்தப் பாலத்தில் இருந்து சுடுகாடு செல்லும் வழியில் கல்யாண மண்டபம் மற்றும் வீடுகள் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. சாட்சி அர்ஜுனனின் ஊரானது பெருமாள் கோயில் பட்டி அது க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு எதிரில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அது எங்கள் ஊரில் இருந்து சுமார் 15 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். எனது தங்கையின் மகன் எனது தாத்தா வழியில் அவர் உறவினர் சொந்த தங்கையின் மகன் கிடையாது. சசிக்குமார் குடியிருந்து வரும் டி.புதூர் என்பது எனது ஊரிலிருந்து 1 கி.மீ தூரம் இருக்கும், அவர் பக்கத்து ஊர்க்காரர் மற்றும் உறவினர். சாட்சி ஜெகதீசன் எனது சகோதரரின் மகன் என்றால் சரியல்ல, அவர் எனது பங்காளி முறை. சாட்சிகள் மூர்த்தி. சிரஞ்சீவி, கண்ணன், அழகுதுரை, ஜே.பி. ஆகியோர் எனது உறவினர் என்றால் தூரத்து உறவினர்கள், நெருங்கிய உறவினர்கள் கிடையாது.

7. சிரஞ்சீவி பெருமாள் கோவில்பட்டியைச் சேர்ந்தவர். சாட்சி சுபாஷ் சந்திரபோஸ், வெங்கடேசன் ஆகியோர் எனது உறவினர் என்றால் பங்காளி உறவுமுறை தான். சாட்சி இராமச்சந்திரன் மற்றும் புகழேந்திரன் ஆகியோர்கள் எனது உறவு முறை என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று எங்கள் ஊரில் நடந்த திருவிழாவானது எங்கள் ஊர் முகமைக்காரர் செஞ்சுரி செல்வம் என்பவரின் ஏற்பாட்டில் திருவிழா நடந்தது அவர் தி.மு.க கட்சியின் இளைஞரணி மாவட்ட அமைப்பாளராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த விழாவிற்கு எங்கள் ஊரைச் சேர்ந்த 300 லிருந்து 400 பேர் விழாவில் கலந்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்தப் பொங்கல் விழாவிற்கு பக்கத்து ஊரைச் சேர்ந்த யாரும் வரவில்லை என்றால் சரிதான். ஆண்டிபட்டி சுற்றியுள்ள கிராமங்களிலும் ஒவ்வொரு கிராமத்திலும் பொங்கல் விழா சிறப்பாக நடைபெறும் என்றால்

சரிதான். அன்றைய தினமே எல்லா கிராமங்களிலும் விழா நடைபெறும் என்றால் சரிதான்.

8. எங்கள் ஊரில் பொங்கல் விழாவிற்கு போலீஸ் பந்தோபஸ் போடப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. நான் போலீசார் யாரையும் அன்றைய தினம் எங்கள் ஊரில் பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் அனுமதி வாங்கி தான் பொங்கல் விழா நடத்துவோம் என்றால் சரிதான். அந்த விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்கள் யாரும் வரவில்லை. அந்த பொங்கல் விழா நடந்து கொண்டிருக்கும் பொழுது ஆண்டிபட்டி காவல்துறையினரைச் சார்ந்த போலீசார் பந்தபஸ்துக்கு இருந்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கின் தன்மை போலீசார் இருந்ததாக சொன்னால் பாதிக்கப்படும் என்பதற்காகவே வேண்டுமென்றே போலீசார் இல்லை என குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

9. ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் எனக்கு என்ன வகையில் உறவினர் என்றால் அவர் ஜாதி அடிப்படையில் எனக்கு மாமா மச்சான் உறவினர் மற்றபடி தூரத்து உறவினர் தான். க.விலக்கு மருத்துவமனையில் போலீசார் தகவல் சொல்லி க.விலக்கு மருத்துவமனையைச் சேர்ந்த போலீசார் மருத்துவமனையில் இருந்த எனது மகனை பார்ப்பதற்கு வந்தார்களா என்றால் வரவில்லை. மருத்துவமனையில் இருந்து போலீசாருக்கு தகவல் சொன்னார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மருத்துவமனையில் க.விலக்கு போலீஸ் ஓ.பி. உள்ளதென்றால் சரிதான். மருத்துவமனை அருகிலேயே க.விலக்கு காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்தபோது விழா நடத்திய செல்வம் மருத்துவமனைக்கு வந்தாரா என்றால் வரவில்லை.

10. நான் க.விலக்கு அரசு மருத்துவமனையில் இருந்து ஆண்டிபட்டி அரசு மருத்துவமனைக்கு சென்ற போது இரவு 2:30 மணி இருக்கும். ஆண்டிபட்டி அரசு மருத்துவமனையில் போலீசார் இருந்தார்கள். அங்கிருந்த போலீசார் குத்து பட்டவர்களுக்கு நான் என்ன வேண்டும் என்ற விபரத்தை கேட்டார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக என்ன நடந்தது என்று போலீசார் என்னிடம் கேட்டார்கள்.

எனது மகனுக்கு யார் மூலம் காயம் என போலீசார் கேட்டார்கள் நான் போலீசாரிடம் ரிப்போர்ட் ஆகவும், வாய்மொழியாகவும் சொன்னேன். நான் அப்போதே ஆண்டிபட்டி அரசு மருத்துவமனையில் இருந்து வெளியே வந்து விட்டேன்.

11. நான் ஆண்டிபட்டி அரசு மருத்துவமனையில் போலீசாரிடம் ரிப்போர்ட் கொடுத்துவிட்டு மருத்துவமனையை விட்டு வெளியே வரும்போது 04.00 மணி இருக்கும். 04.00 மணிக்கு நான் மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த பிறகு நேரடியாக ஊருக்கு சென்று விட்டேன் என்றால் சரிதான். நான் ஊருக்கு சென்ற பிறகு போலீசார் எனது வீட்டிற்கு வந்து சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்று சம்பவத்தில் என்ன நடந்தது என்பது குறித்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன விபரங்களை போலீசார் பதிவு செய்து கொண்டார்கள். என்னிடம் போலீசார் நான் சொன்ன விபரங்களை எழுதி கையெழுத்து வாங்கினார்களா என்றால் கையெழுத்து வாங்கவில்லை, சொன்ன விபரங்களை எழுதிக் கொண்டார்கள். அவ்வாறு நிகழ்ந்தது சம்பவத்திற்கு மறுநாள் காலை 06.00 – 6:30 மணி இருக்கும். போலீசார் வந்தார்கள் யார் வந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

12. என்னை போலீசார் சம்பவயிடத்திற்கு மறுநாள் காலை அழைத்துச் செல்லவில்லை.போலீசார் ஊர்க்காரர்களை சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்த சரக்கு அடிக்கும் பாட்டில் மற்றும் உணவுப் பொருட்களை போலீசார் பார்வையிட்டார்கள் என்றால் சரிதான். அங்கே சம்பவயிடத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சொல்லும் கத்திகளையும் போலீசார் பார்வையிட்டார்கள் என்றால் சரிதான். அங்கேயே நம்பர் பிளேட் சரியாக எழுதாத பைக்கை போலீசார் பார்வையிட்டார்கள் என்றால் சரிதான். அந்த பைக் ஹீரோ ஹோண்டா ஸ்ப்லெண்டர் சீட்டு கிழிந்த பைக் என்றால் சரிதான். நான் பைக்கை பார்க்கவில்லை சாட்சியிடம் புகைப்படத்தை காட்டி வழக்கறிஞர் கேட்டபோது தான் பைக்கை பார்க்கவில்லை என்றும், ஊர் காரர்கள் சொன்னதாக

சொல்கிறார். காவல் நிலையத்தில் அந்த பைக்கை யார் ஒப்படைத்தது என்பது குறித்து எனக்கு தெரியாது.

13. போலீசார் மறுநாள் காலை எனது வீடு மந்தை மற்றும் சுடுகாடு ஆகிய இடங்களில் புகைப்படம் எடுத்தார்களா என்றால் அவ்வாறு எடுத்ததாக சொன்னார்கள் எனக்கு நேரடியாக தெரியாது. முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகள் நேசமணி, கார்த்திக், செல்வமணி, மனோஜ் குமார் ஆகியோர்கள் பெயர் மட்டுமே தெரியும் என்ற விவரத்தை நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் அவர்கள் பெயர்கள் தெரியுமென்றும் ஆட்களை மட்டுமே என்னால் அடையாளம் காட்ட முடியாது என நான் சொல்லி உள்ளேன். எனக்கு தகவல் சொன்ன சசிக்குமார் சொல்லி எனக்கு எதிரிகள் பெயர் அனைத்தும் தெரியும்.

14. நான் எதிரிகளின் தந்தை பெயர் மற்றும் அவர்கள் குடியிருக்கும் ஊரின் பெயர் புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் 1 முதல் 4 அவர்களது வயதை நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். சம்பவத்திற்கு மறுநாள் நான் காவல் நிலையத்திற்கு காலையில் 8:00 மணிக்கு சென்று விட்டேன். அங்கு காவல் நிலையத்தில் போலீசார் நேசமணி, செல்வமணி, கார்த்திக், மனோஜ்குமார் ஆகிய நான்கு பேரையும் பிடித்து வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் படி நான் முதல் தகவலை அறிக்கையில் கையெழுத்திட்டு உள்ளேனா என்றால் கையெழுத்து செய்யவில்லை.

15. எனது உறவினர் எழுதிக் கொடுத்த புகாரில் நான் கடைசி பக்கத்தில் மட்டும் கையொப்பம் செய்தேன். மற்ற பக்கங்களில் கையொப்பம் செய்யவில்லை. புகார் எழுதியவரும் கடைசி பக்கத்தில் மட்டும் கையெழுத்து போட்டதாக ஞாபகம் இல்லை. சாட்சி தற்பொழுது கடைசி பக்கத்தை மட்டும் அவர் கையெழுத்து போட்டதாக தெரிவிக்கிறார். நானும், புகார் எழுதியவரும் கடைசி பக்கம் தவிர மற்ற பக்கங்களில் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான்.

16. மறுநாள் நான் காவல் நிலையம் சென்றபோது போலீசார் என்னிடம் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லும் கத்திகளை காட்டினார்கள் என்றால் சரிதான். எனது மகனின் கொலை சம்பந்தமாக மறுநாள் ஆண்டிப்பட்டி பஸ் ஸ்டாண்ட் அருகில் நாங்கள் மறியல் போராட்டம் செய்தோம் என்றால் சரியல்ல. எனது மகனின் பிரேதத்தை நான் தூக்கும்போது எனது உடலில் ரத்தக்கறை படிந்தது என்றால் சரிதான். அந்த ரத்தக்கறை படிந்த உடைகளை போலீசாரிடம் நான் ஒப்படைக்கவில்லை. மறுநாள் நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது சாட்சி சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் வெங்கடேசன் அவர்களை நான் காவல் நிலையம் அழைத்து சென்று சாட்சி கையெழுத்துப் போட்டார்கள் என்றால் மறுநாள் அழைத்துச் சென்றேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அம்மாவாசை மற்றும் பரமசிவம் எதிரிகளின் உறவினர்கள் கிடையாது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த தினம் அமாவாசை என்றால் சரிதான். நான் எனது மகனை TATA ACE வண்டியில் எடுத்துச் சென்றேன். எனக்கு TATA ACE வண்டிக்கும், மகேந்திரா பிக்கப் வண்டிக்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான்.

17. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் ஆண்டிபட்டி காவல் நிலையம் சென்று புகார் தெரிவித்தேன் என கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து கொடுத்த புகாரில் எதிரிகள் பெயர் குறிப்பிடவில்லை என்றும், அடையாளம் தெரியாத நபர்களால் சம்பவம் நடைபெற்றதாக சொன்னதன் பேரில் அந்தப் புகார் தற்போது வழக்குக்காக மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. பின்னிட்டு ஊரில் எனக்கு பிடிக்காத எனது உறவுக்காரர் மனோஜ் குமார் பெயரை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மின்சார வாரியத்தில் பணிபுரியும்போது செய்த குளறுபடிகள் தொடர்பாக மனோஜ் குமார் எனக்கு எதிராக புகார் தெரிவித்ததன் பேரில் அவர் மீது காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவரது பெயர் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

18. மனோஜ் குமாருக்கும், எனக்கும் ஊரில் பொங்கல் விழா நடைபெறுவது தொடர்பாக முன்விரோதம் இருந்து வந்தது என்றும், இருவரும் தனித்தனி அணியாக செயல்பட்டு வந்தோம் என்றால் சரியல்ல. உண்மையான குற்றவாளிகள் யார் என்று தெரியாத பட்சத்தில் மனோஜ் குமார் மற்றும் அவரது நண்பர்களை இந்த வழக்கில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் எனது மகன் இறப்பிற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. சாட்சிகள் ஜெகதீஷ் மற்றும் அர்ஜுனன் ஆகிய இருவரையும் விசாரித்து அவர்கள் வாயிலாக சம்பவம் குறித்து தெரிந்து கொண்டு புகார் தெரிவித்ததாக கூறுவது புகார் கொடுப்பதற்கு ஏற்பட்ட அந்த காலதாமதத்தை மறைப்பதற்காக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

19. மறுநாள் காலையில் நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது போலீசார் எதிரிகளின் பெயர்களைச் சொல்லி என்னை அடையாளம் காட்ட சொன்னார்களா என்றால் அவ்வாறு அடையாளம் காட்ட சொல்லவில்லை. இந்த வழக்கில் முன் விரோதம் என நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

**<u>7 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மேற்கண்ட குறுக்கு விசாரணையை தனது குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2025.10.06 18:17:42 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.